புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2055 • மார்ச் 07, 2024 • புரட்சி 24 • முழக்கம் 08 • விலை ரூ.3.00

# சனாதனம் குறித்த உதயநிதி பேச்சு; உச்சநீதிமன்றத்தின் கருத்து சரியா?

தமிழ்நாட்டு அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினின் சனாதனம் குறித்த பேச்சிற்கு உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ள கருத்து அதிர்ச்சியளிக்கிறது. ஒரு அமைச்சரே இப்படி சனாதனத்தை எதிர்க்கலாமா? என்று கேள்வி எழுப்பிய உச்சநீதிமன்றம், கருத்து சுதந்திரத்தை முறைகேடாக பயன்படுத்துவதாக கருத்து தெரிவித்துள்ளது.

சனாதனம் அரசியல் சட்டத்திற்கு எதிரானது. சனாதன தர்மம் என்றால் என்ன? என்பதை விவாதித்து விளக்கமளிக்காத உச்சநீதிமன்றம், ஒட்டுமொத்தமாக சனாதன தர்மத்தை எதிர்க்க கூடாது, அது அதிகாரத்தை முறைகேடாக பயன்படுத்துவது என்று கூறுவது சற்றும் நியாயமற்ற ஒரு வாதமாகும்.

சனாதன தர்மத்தை வாழ்க்கை முறை என்கிறார்கள். ஆனால் வேத பண்டிதர்கள் முதல் சங்கராச்சாரியார் வரை சனாதனம் என்பது வர்ணாசிரம தர்மம் தான் என்று கூறியுள்ளனர். பிராமணன் - சத்திரியன் - வைசியன் - சூத்திரன் என்ற நான்கு பிரிவுகளை உள்ளடக்கியது தான் சனாதன தர்மம் என்று கூறுகிறார்கள். கீதையிலே கிருஷ்ணனும் இந்த நான்கு வர்ணத்தை காப்பாற்றுவதற்கு தான் நான் அவதாரம் எடுத்தேன் என்று கூறுகிறான். இது அரசியல் சட்டத்திற்கு எதிரானது. அரசியல் சட்டம் குடிமக்கள் அனைவரும் சமம், பிறப்பின் அடிப்படையில் பேதம் காட்டக்கூடாது என்று கூறுகிறது. இந்த சனாதன தர்மம் தான் நம்முடைய வாழ்க்கையின் இலட்சியமாக இருக்க வேண்டுமென்றால் இந்தியாவில் நாடாளுமன்றம், நீதிமன்றம், அரசியல் சட்டங்கள் எதுவும் இருக்கக் கூடாது.

அரசியல் சட்டம் சனாதனத்தை காப்பாற்றுவதற்கு அல்ல, சனாதனத்தின் பெயரால் பாகுபாடு காட்டுகிற போது அனைவருக்கும் சமமான நீதியை வழங்கி அந்த பாகுபாடுகளை தகர்த்தெறிவது தான் அரசியல் சட்டத்தின் கடமை. சனாதன வாழ்க்கைமுறை தான் இந்த நாட்டில் கணவனை இழந்த பெண்ணை நெருப்பில் தள்ளியது. பெண் குழந்தைகள் பிறந்தால் அவற்றை கொலை செய்ய வேண்டும் என்று கூறியது. விதவைகள் திருமணம் செய்துகொள்ள கூடாது, அவர்களுக்கு வழிபாட்டு உரிமை இல்லை என்று கூறியது இந்த சனாதன வாழ்க்கைமுறை. இவைகளை எல்லாம் எதிர்த்து நீதிமன்றங்கள் - சட்டங்கள் வழியாகத்தான் சமத்துவம் நிலைநாட்டப்பட்டது.

சபரிமலை அய்யப்பன் கோயிலுக்கு பெண்கள் செல்ல அனுமதி மறுத்தது சனாதன தர்மம். ஆனாலும் பெண்களும் சபரிமலை கோயிலுக்குள் செல்லலாம் என்று கூறியது இதே உச்சநீதிமன்றம் தான் என்பதை மறந்துவிடக் கூடாது. அரசியல் சட்ட வரைவுக்குழுத் தலைவராக இருந்த புரட்சியாளர் அம்பேத்கர் கூட சனாதனத்தை கடுமையாக எதிர்த்தார். அதற்காக அரசியல் சட்டத்தை எழுதிய அம்பேத்கரை ஒருபோதும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்த முடியாது.

வள்ளலார் முதல் வேத மரபில் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று கூறுகிற அனைவரும் சனாதன எதிர்ப்பாளர்கள் தான். தன்மானமும் சுயமரியாதையும் உள்ள எவரும் சனாதன தர்மம் கூறுகிற கோட்பாட்டை ஏற்க மாட்டேன் என்று தான் கூறுவார்கள். இதுதான் சனாதன தர்மத்தினுடைய எதிர்ப்பின் உள்ளடக்கம். இவற்றையெல்லாம் கருத்தில் கொள்ளாமல் ஒரு அமைச்சர் இப்படி பேசலாமா? என்று உச்சநீதிமன்றம் கருத்து கூறுவது ஏற்றுக்கொள்ள முடியாதது. இது அவருடைய சொந்த கருத்தாக இருக்கலாமே தவிர ஒரு போதும் சட்டத்தின் கருத்தாக இருக்க முடியாது.

கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் வாட்ஸ் ஆப் பதிவு (05.03.2024)

# பத்திரிகையாளர்களை பந்தாடிய பாஜக

அடுத்து வரும் நாடாளுமன்றத் தேர்தலில் 400 தொகுதிகளுக்கு குறையாமல் வெற்றி பெறுவோம் என்று பாஜக கூறத் தொடங்கியிருக்கிறது. அதற்கேற்ப மக்கள் மனநிலையைக் கட்டமைக்கும் விதமாக, பல ஊடகங்கள் கருத்துக்கணிப்புகளை திணிக்கத் தொடங்கியிருக்கின்றன. தமிழ்நாட்டில் டெபாசிட் வாங்கும் அளவுக்குக்கூட வளர்ந்திடாத பாஜக 18% வாக்குகளுக்கு மேல் பெறும் என்றும், 4 முதல் 6 தொகுதிகள் வரை வெல்லக்கூடும் என்றும் புதிய தலைமுறை ஊடகம் கூட கருத்துத் திணிப்பு செய்தது. இப்படி பாஜகவிற்கு ஆதரவாக கருத்துருவாக்கம் செய்ய முயலும் ஊடகங்களையும், ஊடகவியலாளர்களையும் கடந்த 10 ஆண்டுகளில் பாஜக அரசு எப்படி நடத்தியிருக்கிறது என்பது பெரும் விவாதத்துக்கு உரியது. இதுகுறித்து “தி ஸ்க்ரால்” ஊடகத்தில் அயூஷ் திவாரி என்பவர் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்:

2014ஆம் ஆண்டில் மோடி ஆட்சிக்கு வருவதற்கு முன்பு பத்திரிகை சுதந்திரக் குறியீட்டில் இந்தியா 180 நாடுகளில் 140-வது நாடாக இருந்தது. அதுவே மோசமான நிலைதான் என்றால், இப்போது 163வது இடத்துக்கு மேலும் பின்தள்ளப்பட்டுள்ளது. 1. அரசாங்கத்திற்கான ஊடக அணுகல் எப்படி இருந்தது? 2. பத்திரிகையாளர்களின் சுதந்திரம் மற்றும் பாதுகாப்பு அளவு 3. ஒன்றிய அரசின் கொள்கை முடிவுகள் ஊடகங்களை எப்படி பாதித்தன? கடந்த 10 ஆண்டுகால மோடி ஆட்சியில் ஊடகங்கள் எப்படி நடத்தப்பட்டன என்பதை இந்த 3 அளவீடுகளில் இருந்து விளக்கலாம்.

**அணுகல் :**

இந்தியாவில் கடந்த 10 ஆண்டுகளில் பத்திரிகையாளர்களின் ஒற்றை கேள்வியைக் கூட பிரதமர் மோடி எதிர்கொண்டதே இல்லை. ஆனால் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், தனது 10 ஆண்டுகால ஆட்சியின் கடைசி 2 ஆண்டுகளான 2012 முதல் 2014 வரையில் மட்டும் 117 முறை பத்திரிகையாளர் சந்திப்புகளில் பங்கேற்றுள்ளார். முந்தைய அய்க்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை அமைச்சராக இருந்த மணிஷ் திவாரி கொடுத்த அதிகாரப்பூர்வ தகவல் இது.

கடந்த 10 ஆண்டுகளில் இரண்டே முறை மட்டும்தான் மோடி பத்திரிகையாளர்கள் கேள்விக்கு பதில் கொடுத்திருக்கிறார், அதுவும் இந்தியாவுக்கு வெளியில். 2015ஆம் ஆண்டு இங்கிலாந்திலும், 2023ஆம் ஆண்டு அமெரிக்காவிலும் இந்த பத்திரிகையாளர் சந்திப்புகள் நடந்தன.

பத்திரிகையாளர்கள் நாடாளுமன்றம் மற்றும் ஒன்றிய அமைச்சகங்களை அணுகுவதில் கடுமையான தடைகளை மோடி ஆட்சியில் எதிர்கொண்டுள்ளனர். அதிகாரிகளை சந்திக்க வேண்டுமென்றால் முன்கூட்டியே அனுமதி வாங்க வேண்டுமென்ற என்ற நிபந்தனையை 2019ஆம் ஆண்டில் ஒன்றிய நிதியமைச்சகம் கொண்டு வந்தது. கொரோனா பேரிடர் காலத்தில் இருந்து பத்திரிகையாளர்கள் நாடாளுமன்றத்திற்குள் நுழைவதற்கே கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுவிட்டன.

வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் காஷ்மீர் மற்றும் அசாமுக்கு சென்று செய்தி சேகரிக்க வேண்டுமென்றால், 2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் இருந்து வெளியுறவுத்துறை மற்றும் உள்துறை அமைச்சகங்களில் அனுமதி பெற வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. காஷ்மீருக்கான சிறப்புரிமை ரத்து மற்றும் குடியுரிமைத் திருத்தச் சட்டங்களால் இந்த கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. வெளிநாட்டு பத்திரிகையாளர்களின் விசாக்கள் தள்ளுபடி செய்யப்படுவதும் சமீப காலமாக அதிகரித்திருக்கிறது.

குஜராத் கலவரத்தில் மோடியின் பங்கை விவரிப்பது தொடர்பாக பிபிசி வெளியிட்ட ஆவணப்படத்தை ஒன்றிய அரசு தடை செய்தது ஊடகங்களின் மீது நடத்தப்பட்ட மிக முக்கியமான ஒரு தாக்குதல். தடையோடு மட்டும் இது முடியவில்லை. அதேகாலகட்டத்தில் பிபிசி அலுவலகங்களில், பத்திரிகையாளர்களின் வீடுகளில் வருமான வரி சோதனையும் ஏவப்பட்டது.

வெளிநாட்டு பயணங்களின் போது, உடன் பத்திரிகையாளர்களையும் அழைத்துச் செல்லும் முந்தைய பிரதமர்களின் வழக்கத்தையும் நரேந்திர மோடி முடிவுக்குக் கொண்டுவந்துவிட்டார்.

**கொள்கை:**

இந்திய ஊடகங்களின் (டிஜிட்டல், அச்சு, காட்சி) முதன்மை வருவாய் என்பது விளம்பரங்கள்தான். முந்தைய அய்க்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியை விடவும், ஒன்றிய பாஜக அரசு முதல் 3 ஆண்டுகளில் ஊடகங்களுக்கான விளம்பர கட்டணத்தை உயர்த்தியிருக்கிறது. ஆனால் 2017ஆம் ஆண்டில் இருந்து விளம்பரக் கட்டணம் படிப்படியாகக் குறைக்கப்பட்டு வருகிறது.

டைம்ஸ், ஏபிபி, இந்து குழும பத்திரிகைகளின் விமர்சனங்களுக்கு பதிலடியாக, அந்நிறுவனங்களுக்கு விளம்பரம் கொடுப்பதையே 2019ஆம் ஆண்டில் ஒன்றிய அரசு நிறுத்தியது. ஊடகங்களில் அந்நிய நேரடி முதலீட்டுக்கான வரம்பும் 26 விழுக்காட்டில் இருந்து 49 விழுக்காடாக உயர்த்தப்பட்டது. எனினும் டிஜிட்டல் ஊடகங்களுக்கு மட்டும் வெளிநாட்டு முதலீடு குவிந்துவிடக் கூடாது என்ற எச்சரிக்கையோடு 26 விழுக்காட்டை அதிகபட்ச வரம்பாக நிர்ணயித்தது ஒன்றிய பாஜக அரசு.

இணையத்தை ஒழுங்குபடுத்துகிறோம் என்ற பெயரில் மோடி அரசு கொண்டுவந்த சட்டங்களும் டிஜிட்டல் மீடியாக்களிடம் நல்ல வரவேற்பைப் பெறவில்லை. தொலைக்காட்சிகளுக்கு உரிமம் வழங்குவதிலும் மோடி அரசு பாரபட்சமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல ப்ளூம்பெர்க் நிறுவனம் குயிண்ட் நிறுவனத்துடன் இணைந்து டிஜிட்டலில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த கூட்டு நிறுவனம் செய்திச் சேனல் ஒன்றை தொடங்குவதற்காக, ஒன்றிய தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகத்திடம் விண்ணப்பித்திருந்தது. ஆனால் 3 ஆண்டுகளாக அனுமதி கிடைக்காததை அடுத்து, செய்திச் சேனல் தொடங்கும் திட்டத்தையே அந்நிறுவனம்

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

தலையங்கம்

# பாஜகவால் யாருக்கு ஆபத்து?

நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கிற வேளையில், வட மாநிலங்களில் வேலையின்மை, வறுமை போன்ற வாழ்வாதார சிக்கல்கள் மேலோங்கி இருக்கின்றன. பாஜகவின் வழக்கமான இந்துத்துவ கோஷம் இந்தத் தேர்தலில் எடுபடப் போவதில்லை, இந்தி ஹார்ட்லேண்ட் எனப்படும் இந்தி மொழி பேசும் மக்கள் அடர்த்தியாக வாழும் மாநிலங்களிலேயே பாஜகவுக்கு சறுக்கல் ஏற்படும் என்று அரசியல் வல்லுநர்கள் பலரும் கூறுகின்றனர். அதற்கேற்ப இந்தியா கூட்டணி தலைவர்களும் கல்வி, வேலைவாய்ப்பு, இடஒதுக்கீடு உரிமைகளையே அதிகம் முன் வைக்கின்றனர். பெரும்பான்மை மக்களாகிய பிற்படுத்தப்பட்ட, பட்டியல், பழங்குடி சமூகத்தினரிடம் இதற்கு ஆதரவுகள் பெருகி வருகிறது.

குறிப்பாக, பீகாரில் ராஷ்டிரிய ஜனதா தள தலைவர் தேஜஸ்வி யாதவ் 10 நாட்களாக அம்மாநிலம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து, மார்ச் 3ஆம் தேதி பாட்னாவில் ‘‘ஜன் விஸ்வாஸ்’ பரப்புரையின் நிறைவுக் கூட்டத்தை நடத்தினார். ராகுல் காந்தி, மல்லிகார்ஜுன கார்கே, அகிலேஷ் யாதவ் உள்ளிட்டோரும் கலந்துகொண்ட அந்த கூட்டத்தில், 15 நேரம் விட்டு விட்டு பெய்த மழை, போக்குவரத்து நெரிசலையும் மீறி 10 லட்சத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். சமீபத்தில் நடந்த பாஜகவின் கூட்டங்களில் எங்குமே இந்த எழுச்சியை பார்க்க முடியவில்லை.

இதை நன்கு உணர்ந்திருக்கும் பாஜக, இம்முறை வடமாநிலங்களை மட்டுமே நம்பினால் உதவாது என்ற நிலையில்தான் தென் மாநிலங்களையும் குறி வைத்திருக்கிறது. அதனால்தான் தென் மாநிலங்களுக்குள் இந்து, இந்தி முழக்கங்களை மட்டுப்படுத்தி வளர்ச்சியை மையப்படுத்தி பேசுவது போல நாடகமாடுகிறது பாஜக. தேர்தல் நெருங்கிவிட்ட நிலையில், ஜனவரியில் இருந்து இதுவரை 4 முறை பிரதமர் மோடி தமிழ்நாட்டுக்கு வந்திருக்கிறார். தமிழ்நாட்டு பாஜகவே ரவுடிகள், ஊழல்வாதிகளின் கூடாரம் என்பதை மறந்துவிட்டு பிரதமர் மோடி ஊழல் எதிர்ப்பு பேசுவதைப் பார்க்கும்போதே பரிதாபம்தான் ஏற்படுகிறது. மதுரை எய்ம்ஸ் மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்டி 5 ஆண்டுகளாக கட்டுமான பணியை தொடங்காமல் தேர்தலுக்கு 2 மாதங்களுக்கு முன்பு தற்போது அவசர அவசரமாக தொடங்கியிருப்பது ஏன்? அதிமுக- பாஜக கூட்டணி முறிவே, தேர்தலுக்கு பிந்தைய கூட்டணிக்கான ஏற்பாடுதான் என்ற சந்தேகமும் எழாமல் இல்லை.

‘‘வடக்கு வேறு- தெற்கு வேறு என்று பிரிக்கப் பார்க்கிறார்கள், ஒரே பாரத நாடுதான்’’ என்றெல்லாம் பாஜகவினர் சமீப காலமாக அடிக்கடி புலம்புவதையும் இதோடு சேர்த்துப் பார்க்க வேண்டியிருக்கிறது. ஆனால் பாஜக நினைப்பது போல வடக்கும், தெற்கும் ஒன்றல்ல. மிக எளிதாக இங்கே காலூன்றி விட முடியாது. இதை ஆணித்தரமாக நிறுவும் வகையில் ‘‘இந்தியாவின் எதிர்காலத்தைப் பார்க்க, தெற்கே செல்லுங்கள்’’ என்ற தலைப்பில் கவர் ஸ்டோரி (முதல் பக்க கட்டுரை) தீட்டியிருக்கிறது ‘தி எகனாமிஸ்ட்’ ஊடகம்.

தென் மாநிலங்களான தமிழ்நாடு, ஆந்திரா, தெலங்கானா, கர்நாடகா, கேரளா இந்தியாவின் ஒட்டுமொத்த மக்கள்தொகையில் 20% மட்டுமே பங்கு வகிக்கின்றன. ஆனால் இந்தியாவின் வளர்ந்த மற்றும் நகரமயமான மாநிலங்களாக இவை இருக்கின்றன. இந்தியாவுக்கு வரும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பலரும் தெற்கு நோக்கியே பறக்க விரும்புகிறார்கள். கடந்த 3 ஆண்டுகளில் இந்தியாவின் ஒட்டுமொத்த அந்நிய முதலீடுகளில் 35 விழுக்காட்டை ஈர்த்திருக்கின்றன. இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இந்த 5 மாநிலங்கள் மட்டுமே 31% பங்கு கொண்டிருக்கின்றன. சிறப்பான கல்வி, அரசு நிர்வாக வசதிகளையும் இம்மாநிலங்கள் கொண்டுள்ளன.

இந்தியாவின் மொத்த மின்னணு பொருட்கள் ஏற்றுமதியில் 46% தென் மாநிலங்களுக்கு சொந்தமானது. புத்தாக்கத் தொழில் நிறுவனங்களில் (ஸ்டார்ட் அப்) யுனிகார்ன் அங்கீகாரத்தை எட்டிய நிறுவனங்களில் 46% தென் மாநிலங்களில் இருந்து இயங்குபவை. தகவல் தொழில்நுட்ப மென்பொருள் ஏற்றுமதி சேவையில் 66% தென் மாநிலங்கள் கொண்டிருக்கின்றன. உலகத்தரத்திலான தணிக்கையாளர்கள், வழக்கறிஞர்கள், வடிவமைப்பாளர்கள், கட்டடக் கலைஞர்கள் மற்றும் பிற வல்லுநர்கள் தென்னிந்தியாவில்தான் 79% இருக்கிறார்கள். இப்படி இந்தியாவின் பொருளாதார என்ஜினாக தெற்கு இருந்தாலும், அதன் அரசியல் வடக்கில் ஒரு தனி கிரகத்தில் இருக்கிறது என சாடியிருக்கிறது எகனாமிஸ்ட் ஊடகம். இந்தி, ஆணவ இந்து அடையாள அரசியல், இசுலாமியர்களுக்கு எதிரான மூர்க்கத்தனம்தான் அங்கு முக்கியத்துவம் பெறுகிறது.

அதனால்தான் பாஜகவின் அரசியல் ஃபார்முலா தெற்கில் எடுபடவில்லை. 1960-களில் இருந்தே மக்கள் தமிழ், ஆங்கிலம் மற்றும் உள்ளூர் மொழிகளை ஆதரிப்பவர்களையே ஆதரிக்கிறார்கள் என்றும் கூறுகிறது எகனாமிஸ்ட் ஊடகம். தென்னகத்தின் வளர்ச்சியை இந்தியா முழுக்க எடுத்துச் செல்வதற்கான வழிகளையும் இந்த கட்டுரை ஆராய்கிறது. அதேவேளையில் மோடி மீண்டும் பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டால், அரசியலமைப்பு பலம் இழக்கலாம்.

நாடாளுமன்றத் தொகுதிகள் மறு வரையறை செய்யப்பட்டு, அதில் தெற்கு இழப்பை சந்திக்கலாம். இந்தி தேசிய மொழியாக்கப்படலாம். நிதி பகிர்வில் வடக்குக்கும் தெற்குக்கும் இடையிலான நியாயமற்ற பகிர்வை முன்வைத்து மோதல்கள் அதிகரிக்கலாம். இந்த மோதல்கள் இந்தியா உடைவதற்கான வழிகளில் கூட இட்டுச் செல்லலாம் என்றும் எச்சரிக்கிறது அக்கட்டுரை. எனவே இந்தியா பாதுகாக்கப்பட வேண்டுமென்றால் கூட அதற்கும் பாஜக வீழ்த்தப்பட வேண்டியது அவசியம்.

மோடி ஆட்சியின் வாழ்வாதாரச் சிக்கலோடு, இந்த எச்சரிக்கையையும் உணர வேண்டிய நெருக்கடிக்கு வட மாநிலங்களை தள்ளியதுதான் பாஜகவின் 10 ஆண்டுகால சாதனைகளில் மிக முக்கியமானது.

## கோவையில் அண்ணா நினைவுநாள் கருத்தரங்கம்; கழக ஏட்டுக்கு ரூ.75,000 நன்கொடை



திராவிட இயக்கத் தலைமகன் பேரறிஞர் அண்ணாவின் 55ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு கோவை மாநகர் மாவட்டக் கழக சார்பில் பேரறிஞர் அண்ணா நினைவுநாள் கருத்தரங்கம் 02.03.2024 அன்று கோவை அண்ணாமலை அரங்கில் நடைபெற்றது.

எம்.ஆர்.இராதா கலைக்குழுவின் பகுத்தறிவுப் பாடல்களுடன் கருத்தரங்கம் தொடங்கியது. சூலூர் தமிழ்செல்வி கருத்தரங்கை தொகுத்து வழங்கினார். மாவட்ட அமைப்பாளர் புரட்சித் தமிழன் தலைமை தாங்கினார், மாதவன் சங்கர் வரவேற்புரையாற்றினார்.

தொடர்ந்து “கோயில்களும் சமூகநீதியும்” என்ற தலைப்பில் மக்கள் சிவில் உரிமைக் கழக தேசிய செயலாளர் வழக்கறிஞர் ச.பாலமுருகன், திராவிட முன்னேற்றக் கழக கோவை மாநகர் மாவட்ட வழக்கறிஞரணி அமைப்பாளர் வழக்கறிஞர் அன்புச் செழியன், திராவிட இயக்க செயல்பாட்டாளர் லோகநாயகி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி, “அறிஞர் அண்ணாவும் தமிழ்நாடும்” என்ற தலைப்பில் நிறைவுரையாற்றினார்.

கருத்தரங்கின் முடிவில் ஜெகதீசன், கார்த்திக் ஆகியோர் கழகத் தலைவர் முன்னிலையில் தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர். அவர்களுக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி நூல்களை வழங்கி வாழ்த்தினார். அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர் சங்கத்தை சேர்ந்த யோகநாதன், வெற்றிச்செல்வன் ஆகியோர் கழகத் தலைவர் கொளத்தூர் மணிக்கு பயனாடை அணிவித்து மகிழ்ந்தனர். கழக வார ஏடான “புரட்சிப் பெரியார் முழக்கம்” இதழுக்கு சந்தா தொகையாக ரூ.75,000-யை மாவட்டக் கழகம் சார்பாக கழகத் தலைவரிடம் வழங்கினார்கள்.

நிறைவாக தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர் நவீன் நன்றி கூறினார். இதில் மாவட்டத் தலைவர் பா.இராமசந்திரன், மாவட்டச் செயலாளர் சூலூர் பன்னீர்செல்வம், மாநகரச் செயலாளர் வெங்கடேசன் உள்ளிட்ட பல்வேறு தோழர்கள் பங்கேற்றனர்.

இந்த நிகழ்வில் கழகத் தலைவர் ஆற்றிய உரை, அடுத்தவார இதழில் வெளியாகவுள்ளது.

## வினா விடை

• எனக்கும் தமிழ்நாட்டுக்கும் உள்ள உறவு மிகப் பழமை யானது. **- மோடி**

ஆமாம், கீழடி அகழ்வாராய்ச்சியிலேயே அதற்கு ஆதாரம் இருக்குன்னு சொல்லுவிங்களோ, உங்கள் பெயரே பத்தாண்டுகளாகத்தான் எங்களுக்கு தெரியும். அண்டப் புளுகு, ஆகாசப் புளுகு.

• சென்னைக்கு வரும் போது தமிழர்களால் எனக்கு சக்தி கிடைக்கிறது **- மோடி**

அதனால் தான் கல்பாக்கத்தில் ஈனுலை அழிவு சக்தியை எங்கள் தலையில் கட்டியிருக்கிங்களா?

• பாஜக தேர்தல் சுவரொட்டியில் எம்.ஜி.ஆர், ஜெயலலிதா படங்கள் **- செய்தி**

விட்டா... முனுசாமி, சி.வி. சண்முகம் படத்தை கூட போட்டுப்பாங்க.

• புதுக்கோட்டை கோயில் கர்ப்பகிரகத்தில் அரிவாளுடன் நுழைந்த நபரை காவல்துறை தண்ணீரை பீய்ச்சி அடித்து வெளியேற்றியது. **- செய்தி**

அய்யயோ ஆகமம் அனுமதிக்குமா? ஏன், வேத மந்திரங்களை வைத்து வெளியேற்ற முடியாதா?

• ஆன்மீகம் தழைக்கும் நாடு நன்றாக மலரும் **- ஆளுநர் தமிழிசை**

ஆனால், ஆன்மீக ஆளுநர்களை கொண்ட மாநிலங்கள் நன்றாக வதைபடும்.

• தேர்தல் பத்திர விவரங்களை வெளியிட மூன்று மாதம் அவகாசம் கேட்கிறது பாரத ஸ்டேட் வங்கி **- செய்தி**

அதற்குள் மோடி உச்சநீதிமன்ற உத்தரவுகளை வங்கிகள் செயல்படுத்த வேண்டாம் என்று அவசர சட்டம் ஒன்றை கொண்டுவந்துவிடுவார்.

# சனாதனத்தை வேரறுக்க பாடுபட்டவர் அய்யா வைகுண்ட சுவாமிகள்



**வள்ளலார், திருவள்ளுவர் என சனாதனத்துக்கு எதிராக, சமத்துவத்தைப் பேசிய தமிழின் பெருமைக்குரிய தலைவர்களை எல்லாம் 'சனாதனவாதிகள்' என திரிபுவாதம் செய்கிற வேலையை ஆளுநர் ஆர்.என்.ரவி செய்துகொண்டே இருக்கிறார். அந்த வரிசையில் இப்போது அய்யா வைகுண்ட சுவாமிகளையும் சேர்த்திருக்கிற ஆர்.என்.ரவி, "சனாதன தர்மத்துக்கு புத்துயிர் ஊட்டி வளப்படுத்தியவர் அய்யா வைகுண்டர்" என்று கூறியிருக்கிறார். அய்யா வைகுண்ட சுவாமிகளை இழிவுபடுத்துகிற ஆர்.என்.ரவியின் இப்பேச்சுக்கு பல்வேறு அமைப்புகள், தலைவர்களிடம் இருந்து கண்டனம் வலுத்து வருகிறது. இந்நிலையில் அய்யா வைகுண்ட சுவாமிகளைப் பற்றி 2018ஆம் ஆண்டு மே மாதம் நிமிர்வோம் இதழில் வெளியிடப்பட்ட கட்டுரையில் இருந்து சில பகுதிகளை தருகிறோம்.**

ஜாதி தீண்டாமை பார்ப்பனிய எதிர்ப்புடன் தமிழ்நாட்டில் பெரியாருக்கு முன்பே 1833இல் இயக்கம் தொடங்கியவர் வைகுண்டசாமி. அவர் வாழ்ந்த குமரிப் பகுதி அன்றைக்கு திருவிதாங்கூர் இராஜ்யத்திலிருந்தது. அதனை அப்பொழுது ஆண்டு வந்தவர் சுவாதித் திருநாள் மகாராஜா, சங்கீத விற்பன்னர்கள் இன்றளவும் போற்றிப் புகழுகிற இந்த மன்னரின் ஆட்சியில் நாடார் சமூகத்தவர் உள்ளிட்ட அடித்தட்டு மக்கள் பெரும் துன்பத்திற்கு ஆளாயினர். சமூகரீதியிலும், பொருளாதார ரீதியிலும் கொடூரமான அடக்குமுறை நிலவியது. சாதிய அமைப்பைக் கட்டிக்காத்து வந்த மன்னர், அநியாய வரி விதித்தும், மக்களைக் கசக்கிப் பிழிந்தும் வந்தார். ஒரு நாடார், நம்பூதிரி பார்ப்பனரிடமிருந்து 36 அடி தூரத்திலும், நாயரிடமிருந்து 12 அடி தூரத்திலும் நின்றுதான் சந்திக்க வேண்டும் என்றெல்லாம் தீண்டாமைக் கொடுமைகள் நிலவிய காலம் அது. பொதுச் சாலைகளிலே செல்ல முடியாது. பொதுக் கிணறுகளிலே நீர் எடுக்க முடியாது. உயர் சாதியினர் வாழும் தெருக்களில்கூடப் போக முடியாது. பிறகு, அவர்களது கோவில்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. இந்தக் கோவில்களுக்கு அருகேயே பள்ளிகளும், அரசு அலுவலகங்களும் இருந்ததால் அங்கேயும் போக முடியாது. அதிகாரிகள் வெளியே வரும்போது பார்த்தால்தான் உண்டு. அது மட்டுமல்ல குடை பிடிக்கவோ, செருப்பு போடவோ முடியாது. ஓடு வேய்ந்த வீடு கட்டக் கூடாது. பொன் நகை அணியக் கூடாது. பெண்கள் இடுப்பில் தண்ணீர் குடம் எடுத்துச் செல்ல முடியாது. தோள் சேலை (மாராப்பு) அணிய முடியாது.

நாடார்களில் ஒரு சிறு பகுதியினர் நிலவுடைமையாளர்களாக இருந்தனர். பெரும் பகுதியினராயிருந்த கள் இறக்கும் தொழிலாளர்களை இவர்கள் மதிப்பதும் கிடையாது; பாதுகாப்பதும் கிடையாது. உயர்சாதியினரோ இவர்கள் அனைவரையுமே தீண்டத்தகாதவர்களாகப் பாவித்தனர். திருவிதாங்கூர் அரசும் இதைத்தான் அமுல்படுத்தி வந்தது. இந்த நிலையில் களத்தில் இறங்கிய சுவாமிகள் இந்த மக்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்திட 'சமத்துவ சங்கம்' என்ற அமைப்பினைத் துவக்கினார். இதில் ஆயிரக்கணக்கான மக்கள் உறுப்பினராயினர். ஆடவர் மட்டுமல்லாது மாதரும் பங்கேற்றனர். ஊர் ஊராகச் சென்று தனது சமத்துவக் கொள்கையைப் பரப்புமாறு சீடர்களைக் கேட்டுக் கொண்டார். தானும் அவ்வாறே பயணம் மேற்கொண்டார்.

ஒற்றுமை உணர்வினை வளர்த்திடவும், தன்னுடைய போதனைகளைப் பரப்பிடவும் 'நிழல் தாங்கல்' என்பதைப் பல ஊர்களில் அமைத்தார். இது வழிபாட்டுத் தலமாகவும், கல்வி நிலையமாகவும், சுவாமிகளின் போதனைகளைப் பரப்பும் பிரச்சார மையமாகவும் விளங்கியது. சமத்துவச் சங்கத்தின் கிளைகள் போலச் செயல்பட்ட இவற்றில் வழிபாடு நடந்தாலும் விக்ரக ஆராதனை கிடையாது. விக்ரகம் என்றால் பூசாரி வந்து விடுவார். பூசாரி என்றால் சாதியப் பாகுபாடு புகுந்துவிடும் என்று அதனைத் தவிர்த்திருக் கிறார். அதே நேரத்தில் அதற்கு சித்தாந்த விளக்கமும் தந்தார்.

**"மறையினிலடங்கா இறையினிலடங்கா**
**வணங்கிலுமடங்கா**
**பலவகையிலுமடங்கா துறையினிலடங்கா**
**தொல்புவியிலடங்கா**
**சுருதியிலடங்கா சகயினிலடங்கா உறவினிலடங்கா**
**மொழியிலுமடங்கா யுகத்திலுமடங்கா ஒரு**
**விதத்திலுமடங்கா"**

– என்று 'இறைவனை' வருணித்த அவர், அவனை எந்த விக்ரகத்திற்குள்ளும் அடைக்க முடியாது என்றார். சுவாமிகளின் இந்த நிலைப்பாடு அவரைப் பின்பற்றுவோரை சித்தாந்த ரீதியிலும் உயர்த்துவதாக அமைந்தது. உருவம் மூலம் தரிசிப்பதைவிட உள்ளொளி மூலம் தரிசிப்பது உயர்நிலை என்றே இந்துமதம் கூறிக் கொள் கிறது. இப்படிச் சொல்லிக் கொண்டாலும் சனாதனிகள் இதனைக் கடைப்பிடிப்பதில்லை. கடைப்பிடித்தால் புரோகிதத் தொழில் பறி போய்விடும். உருவமற்ற வழிபாட்டு முறையை நடைமுறைப்படுத்தினார் சுவாமிகள்.

அதிகம் படித்திராத – அனுபவ ஞானத்திலேயே – தமது மக்களுக்கு எது நல்லது என்பதை உணர்ந்திருந்த சுவாமிகள், பேய், பிசாசு, மாந்திரீகம் என்று ஏமாந்து போவதைத் தடுக்கவும் முயன்றார். ஆலயங்களுக்குள் நாடார்கள் உள்ளிட்ட அடித்தட்டு மக்கள் நுழைய முடியாத நிலையிலும் அவர்களது காணிக்கைகள் மட்டும் புரோகிதர்களுக்கு தேவைப்பட்டது. எனவே, தொலைவில் நின்று காணிக்கைகளை இவர்கள் எறிய, புரோகிதர்கள் பதிலுக்குத் தூக்கியெறியும் இலைக்கட்டுப் பிரசாதத்தைப் பெற்று மகிழ்வர். ஏற்கெனவே வறுமையில் வாடிய இந்த மக்ககள் பக்தி மேலீட்டால் சுயமரியாதையையும் இழந்து கைப்பொருளையும் இழந்தனர். இதனால் சுவாமிகள் –

**"காணிக்கையிடாதுங்கோ காவடி**
**தூக்காதுங்கோ**
**வீணுக்குத் தேடுமுதல் விருதாவில்**
**போடாதுங்கோ"**

– என்றார். உயர்சாதியினர் கோவிலுக்கு காணிக்கையிடுகிற வேலையை 'விருதா' வேலை என்று பாமரத் தமிழில் போதித்திருக்கிறார் சுவாமிகள். அதே நேரத்தில் ஏழைகளுக்கு தர்மம் செய்வதை வலியுறுத்தினார். "பயந்து தர்மமிட்டு அந்தப் பரம்பொருளைத் தேடிடுங்கோ" என்றார்.

சாதிய ஒடுக்குமுறை எதிர்ப்பு என்பது இப்படிச் சமய சீர்திருத்தத்தோடே ஒட்டிப் பிறந்தது. அதே நேரத்தில், சமூகத்தில் தலை நிமிர்ந்து நடக்க அவர்களுக்கு சுயமரியாதை உணர்வை ஊட்ட வேண்டியிருந்தது. சமூக அவமரியாதைகளில் சிலவற்றையாகிலும் ஒழிக்க வேண்டியிருந்தது. அச்சத்தைப் போக்கி எதிர்த்து நிற்கும் தைரியத்தைக் கொடுக்க வேண்டியிருந்தது.

தன்னைக் காண வந்த மக்களிடம் தலைப்பாகை அணிந்து வருமாறு வற்புறுத்தினார் அய்யா வைகுண்டர். அதற்கும் ஒரு காரணம் இருக்கிறது. ஆதிநாளில் ஒரு நாடார் சமூக இளைஞனுக்கு அவனது 16ஆவது வயதில் தலையில் தலைப்பாகைக் கட்டி கையில் பிச்சுவா கத்தி கொடுப்பார்கள் – அவர் பெரிய மனிதன் ஆகிவிட்டதன் அடையாளமாக, பல இடைத் தட்டு சாதிகளில் இந்த வழக்கம் இன்றைக்கும் உண்டு. குடும்பத் தலைவர் இறந்ததும் அவரது மகன்களுக்கு இப்படி தலைப்பாகை கட்டுவார்கள். இதற்கு "உறுமால் கட்டு" என்று பெயர். இந்தப் பழக்கம் இடைக்காலத்தில் நாடார் சமூகத்தைப் பொறுத்தவரை உயர்சாதி யினரால் தடுக்கப்பட்டிருக்கிறது. சுமை தூக்கக் கூட தலைப்பாகை அணிய அனுமதிக்கவில்லை. 'சுருமாடு' என்று பெயரில் வைக்கோலை மட்டும் தலையில் வைக்க அனுமதிக்கப் பட்டனர். இந்த அநியாயக் கட்டுப்பாட்டை மீறச் சொன்னார் சுவாமிகள். வழிபாட்டின்போது அவரது அன்பர்கள் இப்பொழுதும் தலைப் பாகை அணிவதைக் காணலாம்.

இதே பாணியில் வீடு கட்டுவதிலும் மாறுதலை புகுத்தினார் சுவாமிகள். மாடி வீடு, ஓடு போட்ட வீடு ஆகியவற்றை அன்றைக்கு தாழ்ந்த சாதி மக்கள் கட்டிவிட முடியாது. அவர்களது வீடுகள் ஒழுங்கற்று ஆங்காங்கே சிதறிக் கிடந்தன. இதற்குப் பதிலாக பல அறைகளுடைய ஒரே திசையில் முன் கதவு வைத்த வீடுகளை அடுத்தடுத்து கட்டுமாறு கூறினார் சுவாமிகள். இது மக்களிடையே நெருக்கத்தையும், ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்தும் என்று அவர் எதிர்பார்த்தார். மாதிரியாக முட்டப் பகுதியில் சுவாமிகள் ஒரு 'சமதர்மக் காலனி' அமைத்தார்.

இத்தோடு தனது சொந்த ஊரில் கிணறு ஒன்றை ஏற்படுத்தி அனைத்து மக்களும் அதனைப் பயன்படுத்தலாம் என்றார். அதனை 'முத்திரிக் கிணறு' (புனிதக் கிணறு) என்று சுவாமிகள் அழைத்தார். சுவாமிகளைக் காண வந்த மக்கள் அக்கிணற்று நீரைக் கொண்டு குளித்து, உண்டி சமைத்து உண்டு மகிழ்ந்தனர். அனைத்து சாதியினரும் இப்படி ஒரே கிணற்றில் நீரெடுத்து சமைத்து சமபந்தி போஜனம் செய்ய வைத்தார் சுவாமிகள்.

தனது சீடர்களைப் பல்வேறு ஊர்களுக்கு அனுப்பி அங்குள்ள தாழ்த்தப்பட்ட சாதியினரின் வீடுகளில் உணவருந்துமாறு கட்டளையிட்டார். சுவாமிகள் ஒரு முறை இப்படியாகத் தனது சீடர்கள் இருவரை பிச்சம்மாள் என்கிற சலவைத் தொழிலாளி வீட்டில் சாப்பிட்டு வருமாறு சொல்ல, அவர்கள் அங்கு சென்றும் சாப்பிட மனமில்லாமல் திரும்பி வந்துவிட்டனர். இதை அறிந்த சுவாமிகள் இருவரையும் கடுமையாகக் கண்டித்து மீண்டும் அந்த இல்லம் சென்று உணவருந்தி வருமாறு செய்தார். இப்படியொரு வாய்மொழிச் செய்தி உள்ளது. இதுவெல்லாம் அந்தக் காலத்தில் சாதாரணமான விஷயமல்ல.

சமூக சீர்திருத்தவாதியுமான இவர் ஒரே நேரத்தில் மன்னர், பார்ப்பனியம் மற்றும் அந்நிய ஆட்சியாளர்கள் – மதபோதகர்களின் எதிர்ப்பை சம்பாதித்துக் கொண்டது வரலாற்றிலேயே ஒரு அபூர்வமான விஷயம். சமூகத் துறையில் ஆதிக்க சக்தியாக இருந்த பார்ப்பனியத்தையும் வெளிப்படையாக எதிர்க்கத் துணிந்தார் சுவாமிகள். "பிராமணர்களைப் பயம் காட்ட நாம் வருவோம்" என்று அடித்தட்டு சாதி மக்களுக்கு தைரியம் ஊட்டினார். அதுமட்டுமா, "பிராமண வேசம் போட பக்தன்மாரே நீங்கள் உண்டு" என்றும் கூறினார். புரோகிதம் என்பதை 'வேசம்' என்று அவர் கூறியது அந்தக் காலத்தில் வேறு எவரும் சொல்லத் துணியாதது என்றால் அந்த 'வேச'த்தை தாழ்த்தப்பட்ட சாதியினரும் போடலாம் என்பது சமூக நீதியின் புதிய பரிமாணம், 'பிராமணியம்' எனும் ஏகபோகத் தன்மையைக் கருவறுக்கிற வேலை.

சமயப் பூசல்களை அடியோடு வெறுத்தார் சுவாமிகள். "நீ பெரிது நான் பெரிது நிச்சயங்கள் பார்ப்போமென்ற வான்பெருதறியாமல் மாள்வார் வீண் வேத முள்ளோர்" என்று கூறியுள்ளார் சுவாமிகள்.

அடித்தட்டு வகுப்பு பெண்களின் உரிமை களுக்காகவும் குரல் கொடுத்தார் சுவாமிகள். தாழ்த்தப்பட்ட வகுப்புப் பெண்களைத் தைரியமாக தோள்சேலை அணியுமாறு அவர் கேட்டுக் கொண்டார். சுவாமிகளின் காலத்தில் கிறிஸ்தவ போதகர்களின் வழிகாட்டுதலில் கிறிஸ்தவ நாடார்களினால் துவக்கப்பட்ட இந்தத் தோள்சேலை அணியும் போராட்டம் சுவாமிகளின் மறைவுக்குப் பிறகு, கிறிஸ்தவ நாடார்கள் – இந்து நாடார்கள் இருவரும் இணைந்து நின்று போராடியதால் வெற்றி கிட்டியது. 1859இல் நாடார் பெண்களுக்கு தோள் சேலை அணிகிற உரிமையை திருவிதாங்கூர் அரசு வழங்கியது. தொடர்ந்து போராட்டங்கள் நடந்த காரணத்தால் 1865இல் இதர அடித்தட்டு சாதிப் பெண்களுக்கும் அந்த உரிமை தரப்பட்டது.

தனது மக்கள் சேவையின் காரணமாய் 'அய்யா' என்று அன்போடு அழைக்கப்பட்ட சுவாமிகளின் சமாதி சாமித் தோப்பில் உள்ளது. அங்கே ஏற்றி வைக்கப்பட்டுள்ள குத்துவிளக்கு ஒளியை மக்கள் கும்பிடுகிறார்கள். இவர் வழி வந்தவர்கள் இறந்தோரை எரிப்பதில்லை; புதைக்கவே செய்கிறார்கள். அதோடு கருமாதி, திதி போன்ற சடங்குகளில் விருப்பமில்லாதவர் களாகவே உள்ளனர். ஒட்டுமொத்தத்தில் ஒரு புதிய சமய நெறியை உருவாக்கி அதன் மூலம் சமூக சீர்திருத்தம் செய்தவர். அய்யா வைகுண்ட சுவாமிகள்

(பேராசிரியர் அருணனின் 'தமிழகத்தில் சமூக சீர்திருத்தம் இரு நூற்றாண்டு வரலாறு' நூலிலிருந்து)

## ஆளுநருக்கு அய்யாவழி தலைமை பதி பால பிரஜாபதி கடும் கண்டனம்

இதுதொடர்பாக அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி: அய்யா வைகுண்டர் குறித்து புத்தகம் வெளியிடுவது போல் வரலாற்றை திரித்து, ஆரிய கோட்பாட்டிற்கு வலு சேர்ப்பது போல் ஆளுநர் ரவி பேசியுள்ளார். அய்யா வைகுண்டர் சனாதன தர்மத்திற்கு எதிராக போர்க்குரல் கொடுத்தார். சமத்துவம் சகோதரத்துவத்தை வலியுறுத்தினார். சாதியை மறந்து பூமியில் ஒத்த இனமாக வாழ வலியுறுத்தினார். ஆனால் மனுதர்மத்தை ஏற்றிருந்த அரசு தான், அய்யாவை சிறையில் தள்ளி கொடுமைப்படுத்தியது. 800 ஆண்டுகளுக்கு முன் உள்ள வரலாற்றை சரியாக படிக்க வேண்டும்.

அய்யாவின் வரலாறு தெரியாமல் யாரும் வாய் திறக்க கூடாது. ஆளுநர் சொல்வது போல் அய்யா வைகுண்டர் சனாதனத்தை காக்க வரவில்லை. மக்களை அதிலிருந்து காக்க வந்தார். அவர்களிடம் இருந்த மடமையை, அறியாமையை போக்க வந்தார். தங்களுடைய சுயலாபத்திற்காக யாரும் வரலாற்றை திரித்து பேசக்கூடாது. ஜாதியை வகுத்தவனை நீசன் என கூறும் அய்யா வைகுண்டரை சனாதனத்தை ஆதரித்தவர் என ஆளுநர் கூறுவதை ஒருபோதும் ஏற்க முடியாது. கண்டிக்கத்தக்கது.

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776



## நங்கவள்ளியில் சர்வாதிகாரத்தை வீழ்த்துவோம் பொதுக்கூட்டம்




சேலம் : சேலம் மாவட்டம் நங்கவள்ளி ஒன்றியம் தானாபதியூரில் இந்து முன்னணியின் தடையைத் தகர்த்து சர்வாதிகாரத்தை வீழ்த்துவோம்! சமூக ஒற்றுமையைக் காப்போம்! 2024 தேர்தல் பரப்புரை பொதுக்கூட்டம் 03.03.2024 அன்று தானாபதியூர் பகுதியில் மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி சீ.அன்பு தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் மேட்டூர் டி.கே.ஆர் இசைக்குழுவின் பறை முழக்கம் மற்றும் சர்வாதிகார BJP அரசின் அவலங்களை விளக்கி பாடல்கள் பாடப்பட்டது.

தொடர்ந்து கார்ப்பரேட் சாமியார்களின் முகத்திரையை கிழிக்கும் வகையில் காவை இளவரசன் அவர்களின் மந்திரமல்ல – தந்திரமே என்கின்ற அறிவியல் விளக்க நிகழ்ச்சி நடைபெற்றது. வனவாசி நகர செயலாளர் பழ.உமாசங்கர் வரவேற்புரை நிகழ்த்த மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி அன்பு தலைமையுரையாற்றினார்.

தொடர்ந்து கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, கழகத் தலைமைக்குழு உறுப்பினர் சக்திவேல், தானாபதியூர் தி.மு.க.இளைஞரணி சந்திரசேகரன், இளம்பிள்ளை திவ்யா, நங்கவள்ளி CPI ஒன்றியச் செயலாளர் பழ. ஜீவானந்தம், தி.மு.க. தலைமைக் கழகப் பேச்சாளர் திருமதி வழக்கறிஞர் முத்து முத்தையா, நிறைவாக கழகத் தலைவர் அவர்கள் தமது நிறைவுரையில் வருகின்ற 2024 நாடாளுமன்ற தேர்தலில் யார் வெற்றி பெறக் கூடாது, ஏன் வெற்றி பெறக் கூடாது என்ற விளக்கத்துடன் உரை நிகழ்த்தினார். நிறைவாக வனவாசி நகர தலைவர் செந்தில்குமார் நன்றி கூறினார்.

### முதல் பக்கத் தொடர்ச்சி

கைவிட்டுவிட்டது. ஆனால் சமகாலத்தில் தொடங்கப்பட்ட ரிபப்ளிக் டிவிக்கு ஒரே மாதத்தில் உரிமம் வழங்கப்பட்டது. (பாஜக ஆதரவாளரான அர்ணாப் கோஸ்வாமி டைம்ஸ் நவ் தொலைக்காட்சியில் இருந்து 2016 நவம்பரில் வெளியேறி, 2017 மே மாதத்தில் ரிபப்ளிக் டிவியை தொடங்கினார்.)

மலையாள செய்தி சேனலான மீடியா ஒன்றின் உரிமத்தை புதுப்பிக்கவும் 2022 ஜனவரியில் ஒன்றிய தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம் அனுமதி மறுத்துவிட்டது. பின்னர் அந்த நிறுவனம் உச்சநீதிமன்றத்துக்கு சென்றே உரிமத்தைப் புதுப்பித்தது.

**பாதுகாப்பு:**

பத்திரிகையாளர்கள் மீதான அடக்குமுறை முன்பிருந்ததை விட மோடி ஆட்சியில் 4 மடங்கு அதிகரித்துவிட்டது. பத்திரிகையாளர்களைப் பாதுகாக்கும் குழுவின் (Committee to Protect Journalists) தரவுகளின்படி, 2014–23 வரையிலான காலகட்டத்தில் 36 பத்திரிகையாளர்கள் நாடு முழுவதும் சிறைபடுத்தபட்டுள்ளனர். ஆனால் முந்தைய அய்க்கிய முற்போக்குக் கூட்டணியின் 10 ஆண்டுகால ஆட்சியில் 8 பத்திரிகையாளர்கள் மட்டுமே சிறைபடுத்தப்பட்டுள்ளனர். தீவிரவாதிகள் மீது பயன்படுத்த வேண்டிய உபா (சட்டவிரோத செயல்கள் தடுப்பு) சட்டத்தின் கீழ் 16 பத்திரிகையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அய்க்கிய முற்போக்குக் கூட்டணியின் 10 ஆண்டுகால ஆட்சியில் 29 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டதாக Reporters Sans Frontieres அமைப்பின் தரவுகள் கூறுகின்றன. இதிலும் மோடி ஆட்சியில் எந்த மாற்றமும் இல்லை. மோடி ஆட்சியிலும் இதுவரை 28 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

இவை மட்டுமல்ல, ஸ்பைவேர்கள் (உளவு மென்பொருள்) கொண்டு அரசியல்வாதிகள், சமூக ஆர்வலர்கள் கண்காணிக்கப்பட்டதைப் போல பத்திரிகையாளர்களும் உளவு பார்க்கப்பட்டனர். சில இளம் பத்திரிகையாளர்கள் வீடுகளில் கூட சோதனைகள் நடந்தன. சில ஊடகங்களில் நியூஸ் ரூம்களே பந்தாடப்பட்டு, சீட்டுக் கட்டுக்கள் போல பத்திரிகையாளர்கள் கலைக்கப்பட்டனர். மோடியின் 10 ஆண்டுகால ஆட்சியில் பத்திரிகையாளர்கள், ஊடகங்களின் நிலைமை இதுதான்.

இப்படிப்பட்ட அடக்குமுறைகளுக்கும், அச்சுறுத்தல்களுக்கும் எதிராக ஜனநாயகத்தின் குரலாக ஒலிக்க வேண்டிய ஊடகங்கள் பாஜகவின் ஊதுகுழலாக ஒலித்துக்கொண்டு, கருத்துத் திணிப்புகளை செய்யத் தொடங்கியிருக்கின்றன என்பதுதான் வேதனைக்குரியது.

## உடுமலையில் கழக சார்பில் பரப்புரை இயக்கம்



திருப்பூர் : திருப்பூர் மாவட்டக் கழக சார்பில் சர்வாதிகாரத்தை வீழ்த்துவோம்! சமூக ஒற்றுமையைக் காப்போம்! தெருமுனைக் கூட்டங்கள் 20.02.24 மற்றும் 21.02.24 ஆகிய இரு நாட்கள் உடுமலை சுற்றுவட்டார பகுதிகளில் நடைபெற்றது.

உடுமலை பேருந்து நிலையம் முன்பு, பெதப்பம்பட்டி, துங்காவி, காரத் தொழுவு, கணியூர், வடதாரை பூளவாடி பிரிவு, ஐந்து முக்கு, பேரறிஞர் அண்ணா சிலை, மத்திய பேருந்து நிலையம் உள்ளிட்ட இடங்களில் நடைபெற்றது.

இதில் மடத்துக்குளம் ஒன்றிய தலைவர் கணக்கன், ஒன்றிய செயலாளர் சிவானந்தம், ஒன்றிய அமைப்பாளர் அய்யப்பன், உடுமலை பகுதி பொறுப்பாளர் இயல், கழகப் பொருளாளர் துரைசாமி, கழக முகநூல் பொறுப்பாளர் பரிமளராசன், கழக திருப்பூர் மாவட்ட அமைப்பாளர் சங்கீதா, திருப்பூர் மாநகர அமைப்பாளர் முத்து, தமிழ்நாடு மாணவர் கழகம் மகிழவன், திவிக தாராபுரம் நகரப் பொறுப்பாளர் செல்வராசு, திருப்பூர் அய்யப்பன், சரசுவதி, விசிக மாவட்டச் செயலாளர் சதீஷ்குமார், திராவிட இயக்கத் தமிழர் பேரவை தங்கவேல், உடுமலை முற்போக்கு கூட்டமைப்பு விஜயசேகர், ஆதித்தமிழர் பேரவை பெரியார் தாசன், திராவிட இயக்கத் தமிழர் பேரவை சந்திரன் ஆகியோர் பங்கேற்று கருத்துரையாற்றினர்.

## வழக்கறிஞர்கள் போராட்டத்திற்கு கழகம் ஆதரவு



சென்னை உயர்நீதி மன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாக்கக் கோரி எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டு அரங்கம் முன்பு நடைபெற்றுவரும் உண்ணா விரத அறப்போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் வழக்கறி ஞர்களை கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், மாவட்டக் கழகச் செயலாளர் இரா.உமாபதி ஆகியோர் 02.03.2024 அன்று சந்தித்து திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக தங்களது ஆதரவை தெரிவித்தனர். இராஜேஷ், அருண் கோமதி, எட்வின் பிரபாகரன் ஆகியோர் உடனிருந்தனர்.

இதே கோரிக்கையை வலியுறுத்தி மார்ச் 1-இல் ஈரோடு வீரப்பன் சத்திரத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர் திருப்பூர் மகிழவன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

## தோழர் திலீபன் உள்ளிட்டோர் மீதான வழக்கு ரத்து

வேலூர் : ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டக் கழகத் தலைவர் திலீபன், பெரப்பேரி கிராமத்தில் பொது இடத்தை ஆக்கிரமித்து கட்டப்பட்ட வீட்டை அகற்ற கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார். இதனால் ஆத்திரமடைந்த எதிர்த்தரப்பு தோழர் திலீபனை கடுமையாகத் தாக்கியது.

தோழர் திலீபனை தாக்கியவர்களை உடனடியாக கைது செய்யக்கோரி 17.04.2023 அன்று ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டக் கழக சார்பில் பானாவரம் காவல்நிலையம் முற்றுகையிடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து காவல் நிலையத்தை முற்றுகையிட்ட கழகத் தோழர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் மீது காவல்துறை வழக்குப்பதிவு செய்தது. இந்த வழக்கு விசாரணை சென்னை உயர்நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில் 01.03.2024 அன்று தீர்ப்பானது. இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட 40க்கும் மேற்பட்டோர் மீது போடப்பட்ட வழக்குப்பதிவை ரத்து செய்து உத்தரவிட்டார் நீதிபதி ஆனந்த வெங்கடேசன்.

இந்த வழக்கில் கழக சார்பில் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திருமூர்த்தி ஆஜராகி வாதாடினார் என்பது குறிப்பிடத்தக்கது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted March 08, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran